தமிழீழ விடுதலைப் புலிகள்
www.tamilarangam.net
Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
29/04/89.

## அன்னிய சக்திகள் எம் மண்ணில் இருக்கும் வரை அரசியல் தீர்வு சாத்தியம் இல்லை.

ஒப்பரேசன் பவான், ஒப்பரேசன் திருசூலம், ஒப்பரேசன் பஜிரா, ஒப்பரேசன் மகாகீர்த்தி, ஒப்பரேசன் செக்மேட், ஒப்பரேசன் பாஸ்.

தமிழீழ மக்களின் இதயங்களில் கொழுந்து விட்டெரியும் விடுதலைத் தீயைப் - பொசுக்க இந்திய ஆக்கிரமிப்பு வாதிகளால் ஏவி விடப்பட்ட இந்திய இராணுவ நடவடிக்கைகளின் பெயர்கள் தான் இவைகள். 1987 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ஆம் திகதி இந்திய ஆக்கிரமிப்பு வாதிகளின் மேலாதிக்கத்தை ஏற்க மறுத்த தமிழீழ மக்கள் மீது இந்திய இராணுவம் ஏவி விடப்பட்டது.

விடுதலைப் புலிகளின் வீரம்செறிந்த எதிர்த் தாக்குதல்களினால் அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் செயலிழக்கச் செய்யப் பட்டன. இதனால் நிலை குலைந்த இந்திய ஆக்கிரமிப்பு வாதிகள் அப்பாவிப் பொது மக்களை பழிவாங்கத் தொடங்கினார்கள். விளைவு 5000 பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். 1000 க்கும் மேற்பட்ட பெண்கள் மானபங்கப் படுத்தப் பட்டார்கள். 600 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப் பட்டன. அல்லது இந்தியப் படைகளினால் - கொள்ளையடிக்கப் பட்டன. இவர்களினால் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான உறுதியைக் குலைக்க முடியவில்லை. மாறாக இந்திய அரசியல் வாதிகளின் விவேகம் இல்லா முடிவுகளினால் பல்லாயிரக் கணக்கான இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர். 5000 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்திய இராணுவம் நிலை குலைந்தது. உண்மையான பலத்துடன் இருப்பவன் அப்பாவிகளை பழிவாங்க மாட்டான். பலவீனமானவனே அநாகரிகமான செயல்களில் ஈடுபடுவான். நாகரீக உலகே வெட்கித் தலை குனியும் படி வைத்திய - - சாலைப் படு கொலைகள், அகதி முகாம் படு கொலைகள், கிராமப் படுகொலைகள் என இந்திய இராணுவம் மனிதப் படு கொலைகளை நடாத்தியது உலகிற்குத் தெரியும். இதை மூடி மறைக்கவும், இந்தியாவின் நலன்களை கவனிக்கவும் என உருவாக்கப் பட்ட ஒரு முகவர் நிலையம் தான் மாகாணசபை. இந்த அடிமைச் சின்னம் இந்திய இராணுவத்தின் திவ்லு முல்லுகளினால் இங்கு உருவாக்கப் பட்ட தினம் 19/11/1988..

சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சு வார்த்தைக்கான அழைப்பை நாம் ஏற்றுக் கொண்டது 14/04/89. இந்த இரு நிகழ்வுகளுக்கும் இடைப்பட்ட 147 நாட்களில் அன்னிய ஆக்கிரமிப்புக்கு எதிராக எமது ஆயுத நடவடிக்கையின் போது 479 ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் உயிரிழந்தனர். 178 பேர் படு காயம் அடைந்தனர். 146 ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப் பட்டன. இவை அனைத்தும் மந்திர சக்திகளால் நிகழ்ந்தவைகள் அல்ல. எமது மாபெரும் மக்கள்பலத்தினால் நிகழ்த்தப் பட்டவையாகும்.

இங்கு நாம் பலம் என்று குறிப்பிடுவது மனிதர்களின் எண்ணிக்கைகள் அல்ல. இலட்சியப் பற்றும், அர்ப்பண உணர்வும் கொண்ட தேச பக்தர்களின் உறுதியையேகுறிக்கின்றோம்.

18 மாத கால தமிழீழ இந்தியப் போரில் இந்திய அரசு புரிந்து கொண்ட உண்மை தமிழீழ விடுதலைப் போரையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் அழித்து விட முடியாது என்பதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய இராணுவம் முற்று முழுதாக இங்கிருந்து வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. அன்னிய சக்திகள் எமது மண்ணில் இருக்கும் வரை அரசியல் தீர்வு என்பது சாத்தியமில்லை.

29/03/89 இல் இருந்து 29/04/89 வரையிலான ஒரு மாத கால தமிழீழ–இந்தியப் போரில் 50 இந்திய இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.11 பேர் படு காயம் அடைந்தனர்.27 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.அவர்களிடமிருந்து 63 ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன.

T 56-1----------12
T 56-II----------04
T 81 ---------01
S.M.G----------06
SHOT ---------19

எமது தரப்பில் 25 விடுதலைப் புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

மேஜர் – சுபாஸ்
காப்டன் – சிறி
" – ரங்கன்
" – சண்முகம்
லெப்ரினட் – குட்டிக்கண்ணன், லெப் - அல்பேட்
" – சுரன்
" – யெனு
" – இன்பம் மாஸ்டர்
" – சதீஸ்
2வதுலெப்ரினட் – பரன்

சுதா, கிறிஸ்ரு, கண்ணன், கயன், நெல்சன், கபில், மாதவன், இளங்கோ, பரமேஸ்வரன், அது, வரதன், எஸ்.பி, சல்மான் இவர்களுக்கு எமது வீர அஞ்சலியைசெலுத்துகின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அரசியல் பிரிவு

தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்